



# Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita



ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

# நவராத்திரி சிறப்பிதழ்

## ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம் - ஒரு சிறு பார்வை

### நிர்க்குண உபாஸனையின் பலன் (46-50/2)

பரதேவதையை 'நிராதாரா, நிரஞ்ஜனா,நிர்லேபா, நிர்மலா, நித்யா, நிராகாரா, நிராகுலா, நிர்க்குணா, நிஷ்களா, சாந்தா' என்று வாயினால் பாடி மனத்தினால் சிந்தித்தால், 'போயபிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்' என்ற படி மனது புத்தி சித்தம் அகங்காரங்களில் படிந்துள்ள காமக் குரோத லோப மோஹ மத மாச்சரியம் என்ற கறைகள் நீங்கி உள்ளம் தேவி நித்தியவாஸம் செய்தற்குரிய திருக் கோயிலாக விளங்கும். அதுவே அவளுடைய அருள் உதித்ததற்கு அறிகுறி.



### ஸகுண உபாஸனை (51-61)

அந்தர்யாகம் பஹிர் யாகம் என்ற பூஜா முறைகளாலும், மந்திரங்களாலும், யந்திரங்களாலும், தந்திரங்களாலும் தன்னை வழிபடுவதற்குப் பரதேவதை பல மார்க்கங்களைக் காட்டியருளியிருக்கிறாள். (ஸர்வேச்வரீ-ஸர்வமயீ ஸர்வ மந்த்ரஸ்வ ரூபிணீ | ஸர்வயந்த்ராத்மிகா ஸர்வதந்த்ரரூபா மனோன் மனீ). சுத்த சிவத்தினிடம் முதன் முதலாயுதிக்கும் 'அஹம்' என்ற உணர்வு அன்னையின் உண்மையான வடிவம். அவ்வடிவத்திற்கு 'ஆதி சக்தி' எனப்பெயர். ஆதிசக்தியின் ஆவிர்ப்பாவத்தினால் தான் பனிமலைபோல், கற்கண்டு மலைபோல் இருந்த சுத்த சிவத்திற்குத் தன் ஸ்வரூப ஆனந்த அனுபவமே உண்டாகிறது. அஃதாவது சிவமும் தன்னையே அறிவதற்கு அன்னை வியாக்கியான ரூபிணியாய், விமர்ச ரூபிணியாய் இருக்கிறாள். அதனால் ஆதிசக்தியாம் அன்னைக்கு 'விமர்சரூபிணி, என்று பெயர். ஆதிசக்தியாம் சித்சக்தியை ஆச்ரயித்து அத்யஸ்த மாயா சக்தி என்ற ஜடசக்தி உதிக்கிறது. இவளையே பராசக்தி எனச் சாஸ்திரங்கள் கூறுகின்றன. மாயாசக்தி என்றாலும் ஜடசக்தி என்றாலும் பராசக்தி என்றாலும் ஒன்றே இந்தப் பரா சக்தியே நாம ரூப விளக்கமாக உலகிற்கு வித்துப்போல்

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

காரணம். பராசக்தி என்ற அன்னையைக் கரசரணாதி அவயவங்களுடைய திவ்ய மங்கல விக்ரஹ தாரிணியாய்க் கருதுவோமானால் அத்தகைய அவளுடைய மூர்த்தியின் திருப்பாதங்களிலுள்ள தூளிகளே இச்சா ஞான க்ரியா சக்திகள். பராசக்தியாம் பெருங்கடலில் இச்சா ஞான க்ரியா சக்திகளாம் ப்ரஹ்ம விஷ்ணு ருத்ரர்கள் என்ற திவிலைகள் கோடி கோடியாக எண்ணிலடங்காத அளவுக் குத் தோன்றி மறைந்த வண்ணம் இருக்கின்றனர். விராட் ஸ்வராட் ஸம்ராட் என்ற பிரம்ம விஷ்ணு ருத்ரர்களைக்கொண்ட பிரஹ்மாண்டங்களும் அத்தகைத்தே.
சுத்தசிவம்

## பஞ்ச ப்ரஹ்ம ரூபம் (61-75)

தீபாராதனையில், ஒன்று, மூன்று, ஐந்து, ஏழு, பல என்று வரிசையாக தீபங்களை ஏற்றியிறக்கிக் காட்டுதலின் கருத்து ஒன்றேயான நிஷ்கலமான பரம்பொருள் ஸகல-நிஷ்கலவடிவில் மூன்றாகவும், பின்னர் விரிந்து ஐந்து, ஏழு, பல என்றுங் காணப்படுகிறது என்பதேயாம்.

பஞ்ச - யஜ்ஞ - ப்ரியா, பஞ்ச -ப்ரேத-மஞ்சாதிசாயினீ, பஞ்சமீ, பஞ்ச -பூதேசீ, பஞ்சஸங்க்யோபசாரிணீ, பஞ்சக் ருத்ய பராயணா' என்று தியானத்தில் பரதேவதையை ஐந்து ஐந்தாக வைத்து அங்கங்கே ஆராதித்துப் பழகுகின்றோம். 'பாங்க்தம் வா இதம் ஸர்வம்| பாங்க்தேனைவ பாங்க்தம் ஸ்ப்ருணோதீதி |' என்று தைத்திரீய உபநிஷத் கூறுகிறது. பஞ்சபூதங்கள், பஞ்சதன் மாத்திரைகள், பஞ்ச பிராணன்கள், பஞ்ச கர்மேந்திரியங்கள், பஞ்ச ஞானேந்திரியங்கள், பஞ்ச கோசங்கள் என உலகெல்லாம் ஐந்தின் மயமாயிருக்கின்றது. ஐந்து வடிவான உலகத்தை ஐந்து இந்திரியங்களால் அறிகின்றோம். ஐந்தின் வடிவான பரதேவதையைக் கந்தம், புஷ்பம், தூபம், தீபம், நைவேத்தியம் என்ற பஞ்சோபசாரங்களால் பூஜிக்கின்றோம்.

பரதேவதை 'பஞ்சப்ரஹ்மஸ்வரூபிணீ'. பிரம்மா, விஷ்ணு, ருத்ரன், ஈசானன், ஸதாசிவன் என்ற ஐந்து வடிவிலும் நின்று ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், திரோதானம், அனுக்கிரஹம் எனும் பஞ்சகிருத்தியங்களையும் செய்பவள் அவளே. பராசக்தியின் இயக்கம் இல்லாத போது பிரம்மா முதலிய ஐவரும் பிரேதங்களைப் போன்ற வர்கள் என்பது தத்துவ இரகசியம்.

## க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞ ரூபம் (76-80)

தேவியே க்ஷேத்ரமாயும் க்ஷேத்ரஜ்ஞனாயுமிருப்பவள். க்ஷேத்ரமாவது-பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் எனும் ஐந்து; அகங்காரம், புத்தி,

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

மூலப்பிரகிருதி எனும் மூன்று; ஞானேந்திரியங்கள், கர்மேந்திரியங்கள், மனதுடன் கரணங்கள் பதினொன்று; சப்தம் ஸ்பர்சம் ரூபம் ரஸம் கந்தம் என்ற இந்திரிய விஷயங்கள் ஐந்து :-ஆக இருப்பது நான்கு தத்துவங்களும் அவற்றின் கூடுதல் விரிதல்களுடன் க்ஷேத்ரம் எனப்படும்.(அல்லது தந்திர சாஸ்திரத்தில் கூறப்படும் முப்பத்தாறு தத்துவங்கள்.) க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞ' ஞானமில்லாமல் மோக்ஷ தருமத்தைப் பற்றிப் பலவாறாய்க் கேட்டாலும் பல கருமங்களைச் செய்தாலும் மோக்ஷம் கிடையாது என்பது உறுதியான உண்மை . பரதேவதையின் அனுக்கிரகத்தால் தான் இந்த ஞானம் உதிக்கும், 'பசுபாசவிமோசினி' யாகிய அவள் ஜீவனுடைய தளைகளை நீக்கி அறியாமையைப் போக்கிப் பரமானந்த அனுபவத்தை அருள்கிறாள். அந்தப் பரமானந்த வாரிதியின் சிறு திவலைகளே விஷயானந்தமனைத்துமாக இருக்கின்றது.




### பீடங்களும் அங்க தேவதைகளும்.(81-97)

பரதேவதையின் அதிஷ்டான பீடங்கள் அகத்தும் உண்டு, புறத்தும் உண்டு. புறத்தே பாரத பூமியில் 'பஞ்சாசத் பீடரூபிணீ' என்று கூறப்பட்ட வகையில் வாராணாசி, நேபாளம், கைலாஸம், கேதாரம், ஓங்காரம், ஹரித் துவாரம், உஜ்ஜயினி, ஹஸ்தினாபுரம், கன்னியாகுப்ஜம், காஞ்சி முதலியன ஐம்பத்தொரு தேவீ பீடங்கள். சப்த வடிவில் ஐம்பத்தொரு அக்ஷரங்களும் ஐம்பத்தொரு பீடங்கள். அகத்தில் ஆராதிக்கும் பீடங்கள் பலவற்றுள் முக்கியமானவை நான்கு என கூறப்படும்; அவை மூலா தாரத்தில் காமகிரி பீடம், அனாஹதத்தில் பூரணகிரி பீடம், விசுத்தியில் ஜாலந்தர பீடம், ஆஜ்ஞையில் ஓட்டியாண பீடம். இந்நான்கு பீடங்களிலும் பரதேவதை பரா, பச்யந்தீ, மத்யமா, வைகரீ என்ற வடிவில் ஆராதிக்கப் படுகிறாள். தேவி 'ஷடங்கதேவதாயுக்தா' என்றபடி ஆறு அங்க தேவதைகளுடன் ஆராதிக்கப்படுபவள். ஹ்ருதயதேவி, சிரோதேவி, சிகாதேவி, நேத்ரதேவி, கவசதேவி, அஸ்திர தேவி என்பவர்கள் அவ்வறுவர்.

'தத்வ-ஆஸனா' என்றபடி முப்பத்தாறு தத்துவங்களும் தேவியின் பீடங்களே. அவற்றில் ஒவ்வொன்றிலும் அவள் எழுந்தருளியிருப்பதாகவும் வழிபட

வேண்டும். அவ்வாறே ஆறு ஆதார பீடங்களிலும் ஆராதிக்கத் தகுந்தவள் அந்த தேவி ஒருவளே.

## யோகினீ நியாஸம் (98-110)

'மஹா சது: ஷஷ்டி கோடி யோகினீ கணஸேவிதா' என்றபடி ஒவ்வொரு சக்கரத்திலும் அறுபத்து நாலு கோடி யோகினிகளால் சேவிக்கப்பட்டவள் பரதேவதை. அவர்களின் சக்தி அனைத்தும் தேவியினுடைய அளவிலடங்காத மகிமையை விளக்குவதேயாம். விசுத்தி, அனாஹதம், மணிபூரகம், ஸ்வாதிஷ்டானம், மூலாதாரம், ஆஜ்ஞா, ஸஹஸ்ராரம் என்ற சக்கரங்களில் கிரமமாக டாகினீ, ராகினீ, லாகினீ, காகினீ, ஸாகினீ, ஹாகினீ, யாகினீ என்ற யோகினிகளின் வடிவினளாகத் தேவியை ஆராதிக்கும் முறை 'விசுத்தி சக்ரநிலயா' என்பது முதல் 'ஸர்வௌதனப்ரீத-சித்தா யாகின்யம்பா ஸ்வரூபிணீ' வரையுள்ள நாமங்களில் விவரிக்கப்படுகிறது. தியானத்தில் அவரோஹணம், ஆரோஹணம் என்ற முறையும் இந்த யோகினீ நியாஸத்தில் அடங்கியுள்ளது.

## விபூதிவிஸ்தாரமும் மார்க்க பேதங்களின் ஸாமரஸ்யமும் (111–180)

ஸ்ரீமத் பகவத்கீதையில் பத்தாவது அத்தியாயமாகிய விபூதியோகம் முதல் பதினெட்டாவது அத்தியாயமாகிய மோக்ஷஸந்நியாஸ யோகம் வரை விரிவாகக் கூறப்பட்டுள்ள விஷயங்கள் அனைத்தும் இப்பகுதியில் அடங்கியுள்ளன.ன் பரதேவதையின் பஞ்சகிருத்தியங்களில் திரோதான் அனுக்கிரகங்களாகிய இரு தொழில்களே முக்கியமாக ஜீவன் கட்டுண்டிருப்பதற்கும் விடுபட்டு முக்தனாவதற்கும் காரணம். ஜீவர்களுடைய பூர்வகருமத்தை அனுசரித்து தேவி அவர்களைப் புண்ணிய பாவம் என்னும் கயிற்றால் கட்டி ஆட்டுவித்தோ, அவர்களை விடுவித்துச் சுதந்திரம் அளித்தோ வேடிக்கை பார்க்கிறாள் தன லீலாவிநோதமான விளையாட்டால். ஜீவன் கட்டுண்டிருக்கும் நிலையில் தனக்கு ஏற்படும் இன்னல்களைப் போக்கிக்கொள்ள நாமபாராயணமே சிறந்த ஸாதனமாகும். 'ஸர்வார்த்த-தாத்ரீ,



ஸர்வவ்யாதிப்ரசமன், ஸர்வம்ருத்யுநிவாரிணீ, கலிகல்மஷநாசினீ, ஸர்வாபத் விநிவாரிணீ, பந்தமோசினீ' என்பன போன்ற நாமங்களை அர்த்தஞானத்துடனும்,

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

அன்பு நிறைந்த மனத்துடனும் நிலைத்து ஜபம் செய்து வழிபட்டால் செல்வம், கீர்த்தி, நல்ல புத்திரப்பேறு, நோயற்ற வாழ்வு, நீண்ட ஆயுள் முதலியவற்றை 'வாஞ்சிதார்த்தப்ரதாயினி'யும் 'க்ஷிப்ர ப்ரஸாதினி'யுமான தேவி விரைவில் நமக்கு அளித்து அருள் புரிந்து நம் கவலைகள் யாவற்றையும் போக்கி மகிழ்ச்சி கடலில் ஆழ்த்துகிறாள்.

எங்கெங்கெல்லாம் அழகுண்டோ, பெருமையுண்டோ, வீரிய முண்டோ, அறிவுண்டோ, ஆனந்தமுண்டோ அங்கெல்லாம் தேவியின் விபூதி பிரத்யக்ஷம் மூலாதாரத்தில் அக்னிஜ்வாலை போன்றும், இருதயத்தில் சூரியப் பிரகாசம் போன்றும், நெற்றியில் வானவில் போன்றும், ஸஹஸ்ராரத்தில் பூர்ணசந்திரன் போன்றும் தேவி யோகிகளுக்குக் காட்சியளிப்பாள். மந்திரத்தில் மந்திரசக்தியாகவும், குருவிடம் குருசக்தியாகவும், பிரம்மாவிடம் பிரம்மசக்தியாகவும், விஷ்ணுவிடம் விஷ்ணுசக்தியாகவும், சிவனிடம் சிவசக்தியாகவும் அவள் ஒருவளே விளங்குகிறாள். கீதத்திலும் நிருத்தியத்திலும் வாத்தியத்திலும் எல்லாக் கலைகளிலும் நூல்களிலும் இன்ப வடிவினளாய் உறைபவள் அவளே. சித்தாகாசமாயும் சிதாகாசமாயும் மஹாகாசமாயும் இருப்பவளும் அவளே. அவளுடைய விபூதியின் ஒரு அம்சமே நாம் காண்பதும் என்பதையும் நாம் மனதில் கொள்ளவேண்டும்.

வேதமாதா தன் நெற்றியில் அணியும் சிந்தூரம் தேவியின் பாத தூளியே. பக்தர்களின் கல்பதருவும் காமதேனுவும் அவளே. அறியவொண்ணாத பெருமை வாய்ந்த அவள் குழந்தையுள்ளம் படைத்தவர்களால் எளிதில் அறியப்படுபவள். யார் யார் எந்த எந்த வழியில் எப்படி எப்படி ஆராதனை செய்தாலும் எல்லாவற்றிற்கும் அவரவர்க்குத் தகுந்தபடி அனுக்கிரகம் செய்பவள் அன்னை பராசக்தியே என்றும் அன்புள்ள தாய்மையுடன்.

### சிவ-சக்தி ஐக்கியம் (181-182/2)


உண்மைப் பொருளாகிய பரப்பிரம்மம் குணமுங் குறியுமற்றதாய், எக்காலத்தும் தன்னுடைய தனிப்பெரும் மகிமையிலேயே நிலைத்திருப்பதாய், எவ்வித அளவைகளாலும் அறிய வொண்ணாததாய், ஆனால் அறிகின்ற அறிவும் செயலற்று ஒடுங்கிய ஸமாதிநிலையில் பிரம்ம வித்துக்களான யோகீசுவரர்களால் அபரோக்ஷமாயநுபவிக்கப் படுவதாய்ப் பிரகாசியா நிற்கும். அந்நிர்க்குணப் பிரம்மம் ஸகுணரூபத்தைத் தன் மாயா பலத்தால் எடுத்துக் கொள்ளும். ஸகுண நிர்குணப் பிரம்மத்தின் அபேதம் வேத காலத்து ரிஷிகளாலும், வேதமார்க்கத்தை விளக்க வந்த ஸ்ரீசங்கராசாரியார் முதலிய அவதார புருஷர்களாலும் நிர்ணயித்துக் காட்டப்பட்டிருக்கிறது. அவ்வித ஸகுண ரூபங்களில் ஈசுவரன், அம்பிகை, விஷ்ணு ஆகிய மூன்று மூர்த்திகள் பிரம்ம

கோடியைச் சேர்ந்தவை என்று ஸ்ரீ அப்பைய தீக்ஷிதர் 'ரத்னத்ரயபரீக்ஷா' என்னும் நூலில் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்கியிருக்கிறார்.

## உத்தர பாகம்

ஸ்ரீ அம்பாளின் ப்ரீதியையே பயனாகக்கொண்ட ஸஹஸ்ர நாமத்தை உபதேசித்துவிட்டு, இனி காம்யமான பயன்களையும் இதனால் அடையலாமென ஸ்ரீஹயக்ரீவர் கூறத் தொடங் குகிறார் :-

ஓ அகஸ்த்யரே! இம் மாதிரி ஸஹஸ்ரநாமம் உமக்கு என்னால் நன்றாகச் சொல்லப்பட்டது. ரஹஸ்யங்களுக்குள் மிகவும் ரஹஸ்யமாயும். ஸ்ரீ லலிதா தேவியின் ப்ரீதியை அளிக்கக்கூடியதுமான இந்த ஸ்தோத்திரத்திற்கு ஸமானமான ஸ்தோத்திரமானது இருந்ததுமில்லை ; இருக்கப்போகிறதுமில்லை என்பது முற்றிலும் உண்மை . ஸர்வ ரோகத்தையும் நன்கு போக்கும் ; ஸர்வ ஸம் பத்துக்களையும் நன்கு வளரச்செய்யும் ; ஸர்வ அபம்ருத்யுக்களையும் போக்கும்; காலம்ருத்யுவை விலகச் செய்யும் மிகப்பெரிய அம்ருதம் தேவியின் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம்.


- SHRI CHAKRA -

எல்லா ஜ்வரங்களால் ஏற்பட்ட பீடைகளையும் போக்கும். தீர்க்காயுஸ்ஸையும் நன்கு அளிக்கும். புத்ரன் இல்லாதவர்களுக்குப் புத்ரனை அளிக்கும். புருஷார்த்தங்களையும் நன்கு கொடுக்கும். இந்த ஸ்தோத்திரமானது ஸ்ரீதேவிக்கு விசேஷமான ப்ரீதியைக் கொடுக்கும். நித்யம் ஸ்ரீ லலிதாம்பாளை உபாஸிப் பதில் ஆவல் கொண்டவன் சிறந்த முயற்சியுடன் இந்த ஸஹஸ்ரநாமத்தை சோம்பல் இல்லாமல் ஜபிக்கவேண்டும்.

முறைப்படி காலையில் ஸ்நானம் செய்து ஸந்த்யா வந்தனத்தை முடித்துக்கொண்டு பிறகு பூஜாக்ருஹத்திற்குச் சென்று ஸ்ரீ சக்ரராஜத்தை அர்ச்சனம் செய்யவேண்டும். ஸ்ரீ அம்பாளின் மந்திரத்தை ஆயிரம் அல்லது முன்னூறு அல்லது நூறு தடவையாவது ஜபம்செய்து பிறகு இந்த ஸஹஸ்ரநாமத்தை ஒன்றுபட்ட மனத்துடன் படிக்கவேண்டும். ஓ அகஸ்த்யரே! நல்ல அறிவுடைய ஒருவன் தனது வாழ்நாளில் ஒரு முறையாவது இந்த ஸஹஸ்ரநாமத்தைப் படிப்பவனுக்கு ஏற்படும் புண்ய பயனைக் கூறுகிறேன், கேள். கங்கை முதலிய எல்லா தீர்த்தங்களிலும் கோடி ஜன்மங்களில் ஒருவன் ஸ்னானம் செய்தாலும், ஒருவன்

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)


அவி முக்தக்ஷேத்ரமாகிய காசியில் கோடி லிங்கங்களை ப்ரதிஷ்டை செய்தாலும், சூர்ய க்ரஹண புண்ய காலத்தில் குருக்ஷேத்ரத்தில் கோடி பாரம் எடையுள்ள தங்கத்தை ச்ரோத்ரியர்களான ப்ராம்மணர்களுக்கு கோடி தடவைகள் தானம் செய்தாலும், கோடி அச்வமேத யாகங்களை கங்கைக் கரையில் ஒருவன் செய்தாலும், ஜலமில்லாத பாலைவன ப்ரதேசத்தில் கோடி கிணறுகளை வெட்டி வைத்தாலும், ஒருவன் க்ஷாமகாலத்தில் பன்னீராயிரம் வருஷங்கள் தினந்தோறும் கோடி ப்ராம்மணர்களுக்கு மிகுந்த சிரத்தையுடன் அன்னதானம் செய்தாலும் எந்த புண்யங்கள் கிடைக்குமோ.


அந்த புண்யங்கள் யாவும் கோடி மடங்காகப் பெருக்கினால் எவ்வளவு அளவு ஆகுமோ. சிறந்ததான அவ்வளவு புண்யங்கள் இந்த ரஹஸ்யஸஹஸ்ரநாமத்தில் ஒரு நாமாவை ஜபிப்பதாலேயே நாம் அடையலாம். யாராயினும் ஒருவன் இந்த ஸஹஸ்ரநாமத்தில் உள்ள ஒரு நாமாவை குருமுகமாக பெற்றுப் படித்தாலும்கூட அதனால் அவனுடைய எல்லா மஹாபாபங்களும் போய்விடுகின்றன. இதில் கொஞ்சம்கூட சந்தேஹமில்லை.

சாஸ்திரத்தில் சொல்லிய தினந்தோறும் செய்ய வேண்டிய கர்மாக்களைச் செய்யாமலிருந்தாலும், சாஸ்திரங்களில் தடுக்கப்பட்ட கர்மாக்களைச் செய்தாலும், அதனால் மனிதர்களுக்கு எந்த பாபம் உண்டாகுமோ, அந்த எல்லா பாபமும் (மற்றொரு ப்ராயச்சித்த கர்மா இல்லாமல் உடனே நாசத்தை அடைந்துவிடுகிறது. இந்த ஸஹஸ்ரநாம பாராயணத்தின் மூலம்.

ஓ அகஸ்த்யரே! அதிகமாகச் சொல்லுவதினால் என்ன பயன் ? சொல்லுகிறேன் கேளும். இங்கு ஒரு நாமத்திற்கு எவ்வளவு பாபங்களைப் போக்கக்கூடிய சக்தி இருக்கிறதோ. அவ்வளவு சக்தி பதினான்கு லோகங்களும் சேர்ந்தாலும் செய்ய முடியாது. எவனொருவன் இதை ஜபிக்காமல் பாபங்களைப் போக்க விரும்புகிறானோ அவன் குளிரைப் போக்கிக்கொள்ள ஹிமயமலையை அடைந்தவனைப் போன்ற புத்திசாலிப் போலாகிறான்.

இந்த ஸஹஸ்ரநாமத்தை எந்த பக்தன் நித்யம் கீர்த்தனம் செய்கிறானோ, அவனுக்கு ஸ்ரீலலிதாதேவி சந்தோஷத்தை அடைந்து கோரிய பொருளை அளிக்கிறாள்.இந்த ஸ்தோத்திரத்தை ஜபிக்காமல் எப்படி அம்பிகையின் பக்தனாக ஆகமுடியும்? நித்யம் இதைப் படிக்க முடியாதவன் புண்ய தினங்களிலாவது படிக்கவும். ஸங்க்ராந்தியிலும், சைத்ர விஷு. துலாரவி இத்தினங்களிலும், தனது ஜன்ம, அனுஜன்ம திரிஜன்ம நக்ஷத்திரங்களிலும், அல்லது தனது நக்ஷத்திரம். பத்னியின் நக்ஷத்திரம், புத்திரனின் நக்ஷத்திரம் இவைகளிலாவது, தக்ஷிணாயன உத்திராயண புண்ய தினங்களிலும், சுக்லபக்ஷ அஷ்டமி, நவமி. சதுர்தசியிலும், வெள்ளிக்கிழமையிலும் அவச்யம் பௌர்ணமியிலும் ஜபிக்க வேண்டும்.





ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)
An Unit of the e magazine Voice of Jagadguru)

பௌர்ணமியன்று சந்திர மண்டலத்தில் ஸ்ரீ அம்பாளை தியானம் செய்து பஞ்சோபசாரங்களால் (கந்த, புஷ்ப, தூப, தீப நைவேத்யங்களால்) நன்கு பூஜித்து ஸஹஸ்ர நாமத்தைப் படிக்கவும். எல்லா ரோகங்களும் நசித்து விடும். தீர்க்காயுஸ்ஸையும் அடைகிறான். இந்த ப்ரயோகமானது ஆயுஷ்கரம்' என கல்ப சூத்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஜ்வரத்தால் பீடையை அடைத்தவனை அவள் சிரஸ்ஸை தொட்டுக்கொண்டு இந்த ஸஹஸ்ர நாமத்தை ஜபிக்கவும், அதே க்ஷணத்தில் தலைவலியும், ஜவரமும் நீங்கி விடும். எல்லா வியாதிகளையும் போக்குவதற்காக விபூதியை கையால் தொட்டுக்கொண்டு இதை ஜபிக்கவும். அந்த விபூதியைத் தரித்துக் கொண்டவுடன் அந்த க்ஷணத்தில் எல்லா வியாதிகளும் நசித்துவிடும். கும்பத்தில் ஜலத்தை வைத்து அதைக் கையால் தொட்டுக்கொண்டு ஸஹஸ்ர நாமத்தை ஜபித்து அபிஷேகம் செய்து வைக்கவும். எல்லா க்ரஹங்களும் அதே கணத்தில் நாசத்தை அடைந்துவிடும். ஸுதா ஸமுத்ரத்தின் நடுவிலிருக்கும் ஸ்ரீ லலிதாம்பாளை தியானம் செய்துகொண்டு எவன் இந்த ஸஹஸ்ர நாமத்தை ஜபிப்பானோ அவனுக்கு கொடுக்கப்பட்ட விஷம் நீங்கிவிடும்.



வெண்ணையைக் கையால் தொட்டு இந்த ஸஹஸ்ர நாமத்தை ஜபித்து மலடிகளுக்குக் கொடுத்தால் நிச்சயம் புத்ரலாபம் உண்டாகும். எந்த ஸ்த்ரீயை விரும்புகிறானோ அந்த ஸ்த்ரீயை ஸ்ரீ அம்பாள் பாசக் கயிற்றால் கட்டி அங்குசத்தால் இழுப்பதாக ஸ்ரீ அம்பாளை த்யானம் செய்துகொண்டு ராத்திரியில் இந்த ஸஹஸ்ர நாமத்தை ஜபித்தால், அந்த ஸ்த்ரீயானவள் அந்தப்புரத்திலிருந்த போதிலும் இவனுடைய ஸமீபத்திற்கு வந்துவிடுவாள். அரசனை தன்னிடம் வரச்செய்ய விரும்புகிறவன் அரசனின் அரண்மனை இருக்கும் திசையை நோக்கி மூன்று தினம் ஸ்ரீ தேவியை த்யானம் செய்துகொண்டு இந்த ஸஹஸ்ரநாமத்தை ஜபிப்பானேயாகில் அந்த அரசன் பரவசனாக ஆகி யானைமீதோ, குதிரைமீதோ ஏறி வேலைக்காரனைப் போல் வணங்கி இவன் ஸமீபம் வந்துவிடுவான். அந்த உபாஸகனுக்கு தனது ராஜ்யத்தையும், தேசத்தையும் கொடுத்து அவன் வசமாக ஆகிவிடுவான்.

ஓ அகஸ்த்ய முனிவரே ! தினந்தோறும் எவனொருவன் இந்த ஸஹஸ்ர நாமத்தை கீர்த்தனம் செய்கிறானோ. அவனுடைய முகத்தைப் பார்த்த மாத்திரத்தினால் முவ்வுலகமும் மோஹத்தை அடைந்து முற்றிலும் அவன் வசப்பட்டுவிடும். பக்தியுடன்கூட எவனொருவன் இந்த ஸஹஸ்ர நாமத்தை

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)
An Unit of the e magazine Voice of Jagadguru)

படிக்கிறானோ அவனுக்கு எந்த சத்ருக்களிருந்த போதிலும், அவர்களை சரபேச்வரர் வதம் செய்து விடுகிறார். இந்த ஸஹஸ்ர நாமத்தை ஜபிப்பவனிடத்தில் யாராவது ஆபிசார (பில்லி, சூன்ய)ப்ர யோகத்தைச் செய்தால் அவனை ப்ரத்யங்கிரா என்ற ஆதர்வண பத்ர காளி தேவதையானவள் இத்த ஆபிசாரத்தை அவனிடத்திலேயே திருப்பி வதம் செய்துவிடுகிறாள். ஸஹஸ்ரநாமத்தைப் படிக்கின்றவனை எவர்கள் கடூரமான பார்வைகளால் பார்க்கின்றனரோ அவர்களை மார்த்தாண்ட பைரவர் சீக்கிரமாக, கண் தெரியாது இருக்கும்படி (பொட்டையாக) செய்துவிடுகிறார். இந்த ஸஹஸ்ர நாமத்தை ஜபிப்பவனுடைய பொருளை எவன் திருடுகிறானோ. அவன் எங்கிருந்தாலும் அவனை க்ஷேத்ரபாலர் வதம் செய்துவிடுகிறார்.

ஸஹஸ்ரநாம ஜபம் செய்கிறவனை வித்யைகளில் எவனொருவன் வாதம் செய்கிறானோ, அவனுடைய வாக்கை உடனே பேசமுடியாமல் நகுலேச்வரீ, செய்துவிடுகிறாள். ஸஹஸ்ரநாம ஜபம் செய்கிறவனிடம் எந்த அரசன் த்வேஷம் கொள்வானோ. அந்த அரசனின் சதுரங்க ஸைன் யத்தையும், தண்டீனீ, தானாகவே அழித்து விடுகிறாள். எவனொருவன் பக்தியுடன் கூட ஆறுமாதம் இந்த ஸஹஸ்ரநாமத்தைப் படிப்பானோ. அவனுடைய வீட்டில் மஹாலக்ஷ்மியானவள் சலிக்காமல் நித்ய வாஸம் செய்கிறாள். எந்த மனிதன் இதை ஒருமாத காலம் நித்யம் மூன்று தடவை படிக்கிறானோ, அவனுடைய நாக்குநுனி யாகிற ரங்கத்தில் (மேடையில்) ஸரஸ்வதி நர்த்தனம் செய்கிறாள். எவனொருவன் சோம்பலின்றி பதினைந்து தினங்கள் நித்யம் ஒருமுறைப் படிக்கிறானோ, அழகுவாய்ந்த ஸ்திரீகள் அவனுடைய பார்வையினாலேயே காம ஸுகத்தில் ஈடுபட்டவர்களாய் அவனிடத்தில் மோஹங்கொள்கிறார்கள்.

தனது ஜீவதசையின் நடுவில் ஒருமுறையாவது எவனொருவன் இந்த ஸஹஸ்ரநாமத்தை பாராயணம் செய்வானோ, அந்த மனிதனின் கண்ணில்பட்ட எல்லோரும் பாபங்களிலிருந்து விடுதலையடைவார்கள். இந்த ஸஹஸ்ரநாமத்தை எவனொருவன் அறிவானோ, அவனிடத்தில் அன்னம். வஸ்த்ரம், பொருள், நெல் முதலிய தான்யம் முதலியவற்றை தானம் செய்ய வேண்டும். மற்றவர்களிடத்தில் கொடுப்பது இம்மாதிரி பயனை அளிக்காது. மந்திரராஜமான ஸ்ரீ வித்யையை எவன் அறிவானோ, ஸ்ரீசக்ரத்தை எவன் நன்கு பூஜிப்பானோ எவனொருவன் இந்த ஸகஸ்ர நாமங்களை நன்கு ஜபிப்பானோ, அவனையே ஸத்பாத்ரமென ஞானிகள் கூறுகின்றனர். ஸ்ரீ தேவியின் ப்ரியத்தை விரும்புகிறவன் அந்த ஸத்பாத்திரத்தினிடத்தில் தான் தானம் செய்யவேண்டும். எவனொருவன் இந்த நாமங்களை ஜபிக்கவில்லையோ, மந்திரராஜத்தையும் அறிந்துகொள்ளவில்லையோ. அவன் மிருகத்திற்கு ஸமமானவன் என்று அறிய வேண்டும். அவனிடம் கொடுக்கும் தானமானது ப்ரயோஜனமற்றதாக ஆகிவிடும்,

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

ஆகையால் புத்திசாலியாக இருப்பவன் நன்கு ஸ்ரீ வித்யா விஷயத்தில் வித்வானாக இருப்பதை பரிசோதித்து அவனுக்கு தானம் செய்ய வேண்டும்.

எப்படி மந்திர ராஜமான ஸ்ரீ வித்யா மந்திரத்திற்கு ஸமமான வேறு மந்திரமில்லையோ? எப்படி ஸ்ரீ லலிதா தேவிக்கு ஸமமான தேவதை இல்லையோ? அவ்விதமே இந்த ரஹஸ்யமான நாம ஸஹஸ்ர ஸ்தோத்திரத்திற்கு ஸமமான ஸ்தோத்திரமுமில்லை. இந்த மிகச் சிறந்ததான ஸஹஸ்ரநாமத்தை எவனொருவன், புஸ்தகத்தில் எழுதி அதை எப்பொழுதும் பக்தியுடன் நன்கு பூஜை செய்கிறானோ, அவனிடத்தில் ஸ்ரீஸுந்தரியானவள் சந்தோஷத்தை அடைகிறாள்.



அதிகமாகச் சொல்வதினால் என்னப்ரயோஜனம், ஓ அகஸ்திய முனிவரே நீர் கேளும், எல்லா தந்திரங்களிலும் இதற்கு ஸமானமான ஸ்தோத்திரமில்லை ஆகையால் உபாஸகன் அன்புடன் நித்யம் இதை ஜபிக்கவேண்டும். தாமரை புஷ்பங்களாலோ, துளசியின் புஷ்பங்களாலோ, செங்கழனீர் புஷ்பங்களாலோ, கதம்ப புஷ்பங்களாலோ, சம்பக புஷ்பங்களாலோ, ஜாதி புஷ்பங்களாலோ, மல்லி, அரளி, புஷ்பங்களாலோ, நெய்தல் புஷ்பங்களாலோ. பில்வபத்ரங்களாலோ, முல்லைப் பூக்களாலோ, அல்லது தும்பைப் புஷ்பங்களாலோ, காஷ்மீர் குங்குமப் பூக்களாலோ, பாதிரி புஷ்பங்களாலோ, மற்ற நல்ல வாஸனை உள்ள தாழம்பூ, மாலதீ, முதலிய புஷ்பங்களாலோ ஸ்ரீ சக்ரத்தை எவனொருவன் அர்ச்சிப்பானோ, அவனது புண்ய பயனைக் கூறுவதற்கு ஸ்ரீ பரமசிவனால் கூட முடியாது. அந்த லலிதா தேவியே, தனது ஸ்ரீ சக்ர அர்ச்சனத்தின் பயனை அறிவாள். ஸ்வல்ப அறிவுடைய ப்ரும்மா முதலிய மற்றவர்கள் எப்படி அறிவார்கள்.?

ப்ரதி மாதமும் பௌர்ணமியன்று இரவில் ஸ்ரீ சக்ரத்திலிருக்கும் பர தேவதையை இந்த ஸஹஸ்ர நாமங்களினால் அர்ச்சனை செய்வானே. அவனே ஸ்ரீ லலிதா தேவியாக இருக்கிறான். ஸ்ரீ லலிதா தேவியே அந்த உபாஸகனாக இருக்கிறாள். அவ்விருவர்களுக்குள் எந்த பேதமில்லை, அப்படி பேதத்தைக் கல்பிப்பவன் மிகக்கொடிய பாவத்தைச் செய்தவனாக ஆவான். மஹா நவமியன்று (நவராத்திரி கடைசி இரண்டு தினங்களுக்கு மஹாநவமி என்று பெயர். அவ்விரு தினங்களும் சிவ, சக்தியின் சேர்க்கையாக உள்ளது) எந்த பக்தன்

ஸ்ரீ சக்ரத்தின் நடுவிலிருக்கும் ஸ்ரீ தேவியை ஸஹஸ்ரநாமங்களால் அர்ச்சிப்பானோ, அவன் கையில் மோக்ஷமிருக்கிறது. வெள்ளிக்கிழமையன்று ஸஹஸ்ரநாமத்தால் ஸ்ரீசக்ரத்தில் ஸ்ரீமஹாதேவியை அர்ச்சிப்பானோ, அவனது புண்யத்தின் பயனைச் சொல்லுகிறேன் கேளும்,

ஸகல ஸௌபாக்யங்களுடன் கூடியவனாய் எல்லா அபீஷ்டங்களையும் இவ்வுலகில் அடைந்து, புத்ரர்கள் பேரப்பிள்ளைகள் இவர்களுடன் கூடி கோரிய எல்லா போகங்களையும் அனுபவித்து கடைசியில் மிகவும் துர்லபமாயும் பரமசிவன் முதலியவர்களால் ப்ரார்த்திக்கத் தகுந்ததுமான ஸ்ரீ லலிதாதேவியின் ஸாயுஜ்யத்தை அடைந்தே தீருவான். இதில் சந்தேஹமில்லை. எவனொருவன் ஆயிரம் ப்ராம்மணர்களை இந்த ஸஹஸ்ரநாமங்களால் பக்தியுடன் அர்ச்சித்து பாயஸம், வடை. முதலிய ஆறு ரஸங்களுடன் கூடிய ஆஹாரத்தை செய்விப்பானோ, அவனிடத்தில் ப்ரீதிகொண்டு ஸ்ரீ லலிதா தேவி தன்னுடைய ஸாம்ராஜ்யத்தையே அளிக்கிறாள், அவனுக்கு முவ்வுலகத்திலும் அடையமுடியாத வஸ்து என்பது கிடையாது. அனைத்தும் அவனிடத்தில்.

இந்த சிறந்த ஸஹஸ்ரநாமத்தை நிஷ்காமமாய் எவெனொருவன் ஜபிப்பானோ, அவன் எதனால் ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுபடுவானோ, அந்தப்ரும்மக்ஞானத்தை அடைகிறான். இந்த ஸஹஸ்ரநாமத்தை ஜபிப்பதால் பொருளை வேண்டுகிறவன் பொருளையும், யசஸ்ஸை விரும்புகிறவன். யசஸ்ஸையும், வித்யையைக் கோருகிறவன் வித்யையையும் அடைவான், ஓ முனிவரே போகம், மோக்ஷம், இவற்றை அளிப்பதற்கு இதற்கு சமமான ஸ்தோத்திரம் வேறு கிடையாது. ஆதலால் போகம், மோக்ஷம், இவ்விரண்டையும் விரும்பும் மனிதர்களால் இது கட்டாயம் ஜபிக்கத்தகுந்தது என்பதில் சிறிதும் ஐயமில்லை. தனது தர்மத்தை அனுஷ்டிப்பதில் ஏற்பட்ட குறைகள் நீங்குவதற்காக நான்கு ஆச்ரமத்தினர்களாலும் எப்பொழுதும் இது நன்கு ஜபிக்கத்தகுந்தது. பாபம் ஒன்றே நிரம்பி உள்ளதும் தர்மானுஷ்டான மற்றதுமான கலியுகத்தில் ஸஹஸ்ரநாமத்தை ஜபிப்பதை விட்டு மனிதர்களுக்கு வேறு நன்மையை அளிக்கக்கூடிய கார்யம் கிடையாது. லௌகிகமான வார்த்தைகளைக் காட்டிலும் விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தை ஜபிப்பது சிறந்தது, அதைக் காட்டிலும் சிவநாமம் சிறந்தது. அதைக்காட்டிலும் தேவீ ஸஹஸ்ரநாமம் சிறந்தது. ஓ அகஸ்த்யரே ! தேவி ஸஹஸ்ர நாமங்கள் கோடிக்கணக்காக உள்ளது.

அவைகளுக்குள் பத்து ஸஹஸ்ரநாமங்கள் முக்கியமாக சொல்லப்பட்டுள்ளது. அவைகளின் பெயரோவெனில் கங்கா, பவானீ, காயத்ரீ, காளீ, லக்ஷ்மீ:, ஸரஸ்வதீ | ராஜராஜேஸ்வரீ, பாலா, ச்யாமலா, லலிதா, தஸ|| இந்த பத்துக்குள் ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமமே மிகவும் சிறந்தது. ஆகையால் கலிதோஷம் விலகுவதற்காக நித்யம் இதை ஸங்கீர்த்தனம் செய்யவேண்டும். ஸ்ரீ மாதாவின்

ஸஹஸ்ரநாமமானது முக்யமென மோஹத்தை அடைந்தவர்கள் அறிவதில்லை. சிலர் விஷ்ணு ஸஹஸ்ரநாம பரர்களாய், சிலர் சிவ ஸஹஸ்ரநாம பரர்களாய்,



இருக்கிறார்கள். இந்த ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம தத்பரர்களாய் உலகத்தில் ஒருவருமே இல்லை.

எவெனொருவன் கோடி ஜன்மாக்களில் இதர தேவதைகளின் ஸஹஸ்ரநாமத்தை ஜபித்திருப்பானோ அவனுக்குத் தான் இந்த ஜன்மத்தில் ஸ்ரீ தேவியின் நாம கீர்த்தனத்தில் சிரத்தை உண்டாகிறது. எப்படி ஒருவன் கடைசி ஜன்மத்தில் தான் ஸ்ரீவித்யோபாஸ்கனாக ஆவானோ, அப்படியே கடைசி ஜன்மத்தில் தான் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமத்தை ஜபிப்பவனாக ஆவான். எப்படி ஸ்ரீ வித்யா ஆராதன மார்க்கத்தை அறிந்தவர்கள் உலகத்தில் குறைவாக இருக்கிறார்களோ, அப்படி ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமத்தை ஜபிப்பவனும் குறைவாக இருக்கிறான். மந்த்ர ராஜ ஜபமும், ஸ்ரீ சக்ர ராஜார்ச்சனமும், ஸஹஸ்ரநாம பாராயணமும், சிறியதான தபஸ்ஸினால் கிடைக்க கூடியதல்ல. ஸஹஸ்ரநாமத்தை படிக்காமல் ஸ்ரீ அம்பாளை எவனொருவன் திருப்தி செய்து வைப்பானோ அவன் கண் இல்லாமல் ரூபத்தைப் பார்க்கும் மூடனான மனிதனாக ஆவான்,

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

ஸஹஸ்ர நாமத்தை ஜபிக்காமல் இஷ்ட ஸித்தியை விரும்புகிறவன் ஆஹாரமில்லாமல் பசியைத் தீர்த்துக்கொள்ளுகிறவன் போல் ஆவான். நூறுகோடி கல்பம் வேறு எதை ஜபித்தாலும் ஸ்ரீ லலிதா தேவி திருப்தி அடைவதில்லை. எந்த பக்தன் ஸ்ரீ லலிதா தேவியின் இந்த ஸஹஸ்ர நாமத்தை நித்யம் கீர்த்தனம் செய்வானோ, அவனைவிட ஸ்ரீ லலிதாதேவியை எளிதில் திருப்தி அடைய செய்வதில் சிறந்தவன் எவனுமில்லை. ஆகையால் பரிசுத்தனாக இருந்துகொண்டு ஸ்ரீமாதாவின் ஸஹஸ்ரநாமாவை படிக்கவேண்டும். ஓ அகஸ்த்ய முனிவரே இம்மாதிரி ரஹஸ்யமான இந்த ஸ்தோத்திரத்தை உமக்கு உபதேசம் செய்தேன்.

ஸ்ரீ வித்யா மந்திரத்தை அறியாதவர்களுக்கும் இதை உபதேசிக்கக்கூடாது. ஸ்ரீ அம்பாளிடத்தில் பக்தி இல்லாதவனுக்கு ஒருபொழுதும் செல்லக்கூடாது. எப்படி ஸ்ரீ வித்யையானது எப்பொழுதும் மறைத்து வைக்கக்கூடியதோ. அப்படி இந்த ஸஹஸ்ரநாமமும் ஆகும். பசுவிற்கு ஸமமான ஜனங்களிடத்தில் இந்த உத்தமமான ஸ்தோத்திரத்தை சொல்லக்கூடாது. எவெனொருவன் ஸ்ரீ வித்யா மந்திரமில்லாதவனிடத்தில் மோஹத்தினால் இதை உபதேசிப்பானோ, அவனிடத்தில் யோகினிகள் என்ற தேவதைகள் கோபம் கொள்கின்றனர். அதனால் அவனுக்கு மிகுந்த அனர்த்தங்கள் ஏற்படுமெனக் கூறப்பட்டுள்ளது. ஆகையால் இந்த ஸஹஸ்ர நாமத்தை மிகவும் ரஹஸ்யமாக வைத்து நன்கு காப்பாற்ற வேண்டும்.

ஓ அகஸ்த்ய முனிவரே இந்த ஸ்தோத்திரத்தை நானாக உமக்கு உபதேசிக்கவில்லை. ஸ்ரீ லலிதாதேவியின் கட்டளையின் பேரிலேயே இந்த உத்தமமான ஸ்தோத்திரம் உமக்கு உபதேசித்தேன். ஓ அகஸ்திய முனிவரே இதை பக்தியுடன் நித்யம் கீர்த்தனம் செய்ய வேண்டும். அதனால் ஸ்ரீஅம்பாள் ஸந்தோஷத்தை அடைந்து உமக்குக் கோறிய பொருளை அளிப்பாள்.

ஸூதர் சொல்லுகிறார்:- ஹயக்ரீவ முனிவர் இம்மாதிரி சொல்லிவிட்டு ஸ்ரீ லலிதா தேவியை த்யானம் செய்து ஆனந்த ஸமுத்திரத்தில் மூழ்கி உடன் மயிர் சிலிர்த்தவராக ஆனார். இம்மாதிரி ப்ரும்மாண்ட புராணத்தில் உத்திர காண்டத்தில் லலிதோபாக்யானத்தில் ஹயக்ரீவ, அகஸ்த்ய ஸம்வாதனத்தில் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பலதிருபணம் என்ற மூன்றாவது அத்தியாயம் முற்றும்.

Our Mail ID : Info@voiceofjagadguru.com

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள், ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்